## நாமக்கல் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் செயல்முறைகள்
## பிறப்பிப்பவர்.திரு.கா.மெகராஜ், இ.ஆ.ப.,

ந.க.8157/2020/எப்6, நாள்: 29.04.2020.

| | |
|---|---|
| பொருள் : | கோவிட்-19 — முடக்கம் - நிவாரணப்பணிகள் - மாவட்ட வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு அலுவலகம் - நாமக்கல் - WORD - திறந்த நிலை சந்தை விற்பனை திட்டம் - இந்திய உணவு கழகத்திலிருந்து 3 டன் அரிசி பெற அதிகாரமளிப்பு கடிதம் கோரியது — தொடர்பாக. |
| பார்வை : | 1. நாமக்கல் மாவட்டம், குமாரபாளையம் வட்டம், பள்ளிபாளையம் அக்ரஹாரம், வெடியரசம்பாளையம், ஆண்டிகாடு, கதவு எண்.7-C ல் உள்ள WORD என்ற அமைப்பின் திட்ட மேலாளர் கடிதம் நாள்: 28.04.2020.<br>2. புதுதில்லி, நிதி ஆயோக்(NITI Aayog) நேர்முக கடிதம் எண்.M-11011/8/2020-SJE, நாள்:16.04.2020. |

*****

**உத்தரவு:-**

நாமக்கல் மாவட்டம், குமாரபாளையம் வட்டம், பள்ளிபாளையம் அக்ராஹாரம், வெடியரசம்பாளையம், ஆண்டிகாடு, கதவு எண்.7-C ல் உள்ள WORD என்ற அமைப்பு பள்ளிபாளையத்தில் உள்ள புலம்பெயர்ந்த தொழிலாளர்களுக்கு வழங்க மொத்தம் 3 டன் அரிசி வழங்குமாறு தெரிவித்து WORD என்ற அமைப்பின் திட்ட மேலாளர் பார்வை 1-ல் மனு அளித்துள்ளார்.

கோவிட்-19 வைரஸ் நோய் தொற்றினால் முடக்கப்பட்டுள்ளதன் காரணமாக நிவாரண நடவடிக்கைகள் / நடப்பில் உள்ள நிவாரண முகாம்கள் ஆகியவை குடியேறிய தொழிலாளர்கள்/ பாதிப்படக்கூடியவர்களுக்கு உணவு தானியங்களை தொண்டு/அரசு அல்லாத அமைப்புகள் மூலமாக வழங்குவது உறுதி செய்யப்படுதல் குறித்து பார்வை 2-ல் வரப்பெற்றுள்ள கடிதத்தில் கீழ்க்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஒரு கிலோ கிராம் கோதுமைக்கு ரூ.21/-, ஒரு கிலோ கிராம் அரிசிக்கு ரூ.22/- என நாடு முழுவதிலும் ஒரே மாதிரியான விலையில் வழங்கப்பட வேண்டும்.

மனுதாரர் கீழ்க்கண்டவாறு அரிசியினை நிர்ணயிக்கபட்ட விலையை சம்மந்தப்பட்ட இந்திய உணவு கழகத்திற்கு செலுத்தி பெற வேண்டும்.

(..2..)

| வ.எண் | மனுதாரர் தெரிவித்துள்ள பயனாளிகள் விவரம் | மனுதாரர் கோரியுள்ள அளவு(டன்) | அனுமதிக்கப்பட்டுள்ள மொத்த அரிசியின் அளவு (டன்) |
|---|---|---|---|
| 1. | குமாரபாளையம் வட்டம், பள்ளிபாளையம் வட்டாரத்தில் உள்ள புலம்பெயர்ந்த தொழிலாளர்கள். | 3 டன் | 3 டன் |

எனவே கோவிட்-19 வைரஸ் நோய் தொற்றினால் முடக்கப்பட்டுள்ளதன் காரணமாக நிவாரண நடவடிக்கைக்காக இந்திய உணவு கழகத்திலிருந்து உரிய கட்டணம் செலுத்தி 3 (மூன்று) டன் அரிசியினை மனுதாரர் பெற்றுக் கொள்ளவும், மனுதாரர் கோரும் அரிசியினை இந்திய உணவு கழகத்திலிருந்து விடுவித்திட கோயம்முத்தூர் இந்திய உணவு கழக கோட்ட மேலாளருக்கு அங்கீகாரம் அளித்தும் உத்தரவிடப்படுகிறது.

பெறப்பட்ட அரிசியினை தகுதியான நபர்களுக்கு வழங்கப்பட்ட விவரத்தினை இவ்வலுவலகத்திற்கு தெரிவிக்க வேண்டும்.

ஒம்/- கா.மெகராஜ்
மாவட்ட ஆட்சித்தலைவர்.
நாமக்கல்.

//உத்தரவுப்படி//

30-4-2020
மாவட்ட ஆட்சித்தலைவருக்காக

பெறுதல்

1.கோட்ட மேலாளர்,
இந்திய உணவு கழகம்,
கோயம்முத்தூர்.

2.திட்ட மேலாளர்,
WORD,
7-C, ஆண்டிகாடு,
வெடியரசம்பாளையம்,
பள்ளிபாளையம் அக்ரஹாரம்,
குமாரபாளையம் வட்டம்,
நாமக்கல் மாவட்டம்.

30/4/2020

நகல்: வட்ட வழங்கல் அலுவலர், குமாரபாளையம்.
(இப்பொருள் தொடர்பாக கண்காணித்து இவ்வலுவலகத்திற்கு அறிக்கை அனுப்பிட வேண்டியது).